**கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் - 2021**

------------------------------------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிறுவனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது

கணக்கீடு செய்தல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல், அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன், அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம்ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம் இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்றுஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டுமதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும்

முகாமைத்துவத்தால்மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனம்யில் உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாககணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனம் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆண்டு முதல் முழுமையாக தேய்விட்டிருந்த போதும் தற்போதும் பயன்பாட்டில் உள்ள கிரயம் ரூபா 118,873,548 ஆன நிறுவனத்திற்கு சொந்தமான 57 வாகனங்கள் தொடர்பாக இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 7 (92) (ஆ) பந்தி பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே இச் சொத்துக்களின் பயனுள்ள ஆயட்காலம் தொடர்பாக மதிப்பீட்டை மீளாய்வு செய்து இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 பந்தி பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்களை மீள்மதிப்படு செய்த அறிக்கை 2022 மே மாத்திளே கிடைத்துள்ளதுடன் அம் மீள்மதிப்பீட்டுப் பெறுமதிகளை 2022 ஆண்டு நிதிக்கூற்றுக்களிற்கு வழங்கப்படும். அவ்வாறே இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 7 (92) (ஆ) பந்தி பிரகாரம் முழுமையாக தேய்வடைந்த சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | முழுமையாக தேய்வடைந்த எனினும் தற்போது பயன்படுத்தும் சொத்துக்கள் தொடர்பான தகவல்களை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தவும் அதன் பயனுள்ள ஆயட்காலத்தை மீளாய்வு செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

#### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 திகதியன்று நிலவிய நுகர்வோர் பண்ட இறுப்புக்களை பௌதீக ரீதியாக ஒப்பாய்வு செய்திருந்த போதும், அப் பௌதீக இறுப்பு பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்க நடவடிக்கை எடுக்காது இறுப்புக்களின் புத்தக பிரகார மீதியான ரூபா 30,999,885 இனை நிதிக்கூற்றுக்களிற்கு உட்படுத்தியிருந்தது. அவ்வாறே பிரதான களஞ்சியத்திளிலிருந்து விநியோகிக்கப்பட்டிருந்த இருப்புகளின் 2021 திசெம்பர் 31 திகதிக்கு 05 ஆராய்ச்சிசி பிரிவிகளில் நிலவிய ரூபா 1,619,565 பெறுமதியான 240 வகையான இரசாயன பொருட்கள் மற்றும் நுகர்வோர் பண்டங்களின் இருப்புக்களும், இயந்திரமயமாக்கல் தொழில்நுட்ப பிரிவில் பெறுமதியை இனங்காணாத 127 வகையான வாகனம் திருத்தும் உதிரிப்பாகங்களின் இருப்பும் மீளாய்வாண்டு இறுதியில் எஞ்சியிருந்த போதும் அவ் இருப்பு மீதிகளை நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஒப்பாய்வு செய்த நுகர்வோர் பண்ட இறுப்பு அறிக்கை 2022 மார்ச் மாதத்திலே பூரணப்படுத்தப்பட்டதால் இறுப்பு புத்தக மீதியை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டது.<br>2022 ஆண்டு முதல ஒவ்வொறு பிரிவின் கீழும் உள்ள இறுப்பு பெறுமானங்களை கணக்கிட்டு நிதிக்கூற்றுக்களிற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிறுதியில் நிறுவனத்திலுள்ள அனைத்து இறுப்புக்களையும் கணிப்பிட்டு அப் பௌதீக இறுப்பு பெறுமதி நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் பகிரங்கப்படுத்தும் அறிக்கை (புவத் ஹசுன) பிரகாரம் எதிமளே சீனி (தனியார்) கம்பனி ஆண்டினுள் சீனி 10,917,000 கி.கிராம் உற்பத்தி செய்ததாக குறிப்பிட்டிருந்த போதும், 1981 இலக்கம் 75 கொண்ட கரும்பு ஆராய்ச்சி நிறுவன சட்டத்தின் 18 பிரிவின் பிரகாரம் கி.கிராம் 01 இற்கு ரூபா 0.10 வீதம் அறவிட வேண்டிய ரூபா 1,090,700 ஆன செஸ் வரியை கணக்கீடு செய்திருக்காததுடன் இலங்கை சீனி தனியார் கம்பனியின் செவனகள பிரிவினால் 2020 ஆண்டிற்குரியதாக 2021 ஆண்டில் அனுப்பப்பட்ட செஸ் வரி ரூபா 1,611,660 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் வருமானம் ரூபா 519,960 தொகை மற்றும் கிடைக்க வேண்டிய வருமானம் ரூபா 1,091,700 குறைவாக காட்டப்பட்டன. | எதிமளே சீனி (தனியார்) கம்பனியிடம் கோரப்பட்ட சீனி உற்பத்தி தரவுகளை பெற்றுத் தராததால் 2021 ஆண்டின் செஸ் வரி வருமானத்தை கணக்கிட முடியாதுள்ளதுடன் வாய் மூலம் உறுதி செய்து கொண்ட தரவுகள் புவத் ஹசுனவிற்கு எடுக்கப்பட்டுள்ளது. தரவுகளை பெற்றுக் கொண்ட பின்னர் செஸ் வரி வருமானத்தை கணக்கிட்டு அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். 2021 ஆண்டில் கிடைத்து வருமானமாக கணக்கீடு செய்துள்ள செவனகள பிரிவில் 2020 ஆண்டு செஸ் வரி தொகையை எதிர்வரும் கணக்காண்டில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | சட்ட பிரகாரம் செஸ் வரி வருமானத்தை அறவிடவும், கணக்கீட்டுக் கொள்கை பிரகாரம் அவ் வருமானத்தை சரியாக கணக்கீடு செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலங்கை சீனி கம்பனி செவனகள பிரிவிலிருந்து நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டிய தொகை ரூபா 6,013,855 ஆக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கியிருந்த போதும் அக் கம்பனியினால் செலுத்த வேண்டியதாக உறுதிப்படுத்திய மீதி ரூபா 4,005,209 மாத்திரமாகும். வழங்கியிருந்த விதை கரும்புகளிற்காக கிடைக்க வேண்டிய தொகையை கணக்கீடு செய்யாதமை இவ் வித்தியாசத்திற்கு காரணமாக இருந்த போதும் அம் மீதிகளை சீராக்கி நிதிக்கூற்றுக்களில் மீண்டும் செம்மையாக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2019, 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் செவனகள பிரவினால் அனுப்பப்பட்ட ரூபா 6,013,855 ஆன கரும்பு தண்டுகளில் வெள்ளை படிவு நோய் கட்டுப்பாட்டு கருத்திட்டம் ஒன்றிற்காக (WLD) கல்ஓய பெருந்தோட்ட கம்பனிக்கு மற்றும் பெள்வத்த பிரிவிற்கு வழங்கியுள்ள விதை கரும்பின் பெறுமதியை கழித்து ரூபா 4,005,209 இற்காக மாத்திரம் மீதி உறுதிப்படுத்தல் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. | கல்ஓய பெருந்தோட்ட கம்பனியிலிருந்து மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) கம்பனியின் பெல்வத்த பிரிவிலிருந்து கிடைக்க வேண்டிய தொகையை வெவ்வேறாக நிதிக்கூற்றுக்களில் காட்ட வேண்டும். |
| (ஈ) | 2021 திசெம்பர் 31 திகதிக்கு பெல்வத்த பிரிவிலிருந்து கிடைக்க வேண்டிய செஸ் வரி ரூபா 3,041,310 என நிதிக்கூற்றுக்களில் காட்டியிருந்த போதும், அப் பிரிவு உறுதி செய்திருந்தது ரூபா 1,194,310 ஆகையால் ரூபா 1,847,000 ஆன வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. 2013-2015 இடையிலான காலத்தினுள் இலங்கை சீனி கம்பனியின் பாவனைக்காக்காக வழங்கியிருந்த நிறுவனத்திற்கு சொந்தமான வாகனமொன்றிற்கு மேற்கொண்ட திருத்த வேலைகளிற்காக அக் கம்பனி ரூபா 1,847,000 தொகையை செலுத்த் | திருத்திய வாகனத்திற்காக பதிலீடு செய்துகொண்டுள்ள இந்த செஸ் வரித் தொகையை நிறுவனத்திற்கு செலுத்துமாறு பெல்வத்த சீனி கம்பனிக்கு 2016 ஆண்டு முதல் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அமைச்சு மட்டத்தில் குறித்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | கிடைக்க வேண்டிய மொத்த செஸ் வரித் தொகையையும் அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய செஸ் வரிக்காக பதிலீடு செய்திருந்தமை அதற்கு காரணமென அவானிக்கப்பட்ட போதும், அத் தொகையை மீண்டும் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | | |
| (உ) | கி.கிராம் 31 அளவிலான 06 காபனீரொட்சைட் சிலிண்டர்களிற்காக சிலோன் ஒக்சிஜன் நிறுவனத்தில் 2016 ஆண்டில் வைத்துள்ள ரூபா 144,000 ஆன மீள் பெற்றுக் கொள்ள முடியுமான வைப்பை 2 ஆண்டுகளின் பின்னர் வருடாந்தம் படிப்படியாக குறைந்து 8 ஆண்டுகளின் கழிந்த பின்னர் இல்லாது போவதாக அந் நிறுவனத்தால் வழங்கிய பற்றுச்சீட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் 6 ஆண்டுகள் கழிந்துள்ள இவ் வைப்பிலிருந்து மீள் பெற்றுக் கொள்ள முடியுமான தொகை 50 சதவீதமானதுடன் இந்த சிலிண்டர் நிறுவனத்தினால் பயன்படுத்துவதானால் வைப்பை மீட்டிக் கொண்டு சொத்தாக கணக்கீடு செய்ய இயலுமை உள்ளதாக அவதானிக்கப்பட்ட போதும் ரூபா 72,000 தேய்வடைந்துள்ள இந்த சிலிண்டரை சொத்தாக கண்கீடு செய்வதற்கு பதிலாக தொடர்ந்தும் ரூபா 144,000 தொகையை மீள் பெற்றுக் கொள்ளக்கூடிய வைப்பொன்றாக நிதிக்கூற்றுக்களில அவதானிக்கப்பட்டிருந்தது. | சிலோன் ஒக்சிஜன் நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்த தற்போது அக் கம்பனிக்கு சொந்தமாக காணப்படும் ரூபா 144,000 பெறுமதியான வாயு சிலிண்டரை உரிய செம்மையாக்கல் மேற்கொண்ட பின்னர் கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் சொத்தொன்றாக சுவீகரிக்க 2022 ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். | சிலின்டரை நிறுவனத்தின் சொத்தொன்றாக சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | நிதிக்கூற்றுக்களில் "வாயு சிலின்டரிற்காக" பெயரில் வைத்துள்ள ரூபா 118,375 ஆன வைப்பு யாரிடமிருந்து கிடைகக் வேண்டியது என குறிப்பிட்டிருக்கவில்லை. | 1987 ஆண்டு கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆரம்ப காலத்திலிருந்து உடவலவ பிரதான வளவில் வாயு சிலின்டரிற்காக வைத்துள்ள ரூபா 118,375 ஆன வைப்பிற்குரிய அறிக்கைகளை கண்டறிவது கடினமாகவுள்ளது. | வைப்பு செய்யப்பட்டுள்ளது எந்த நிறுவனத்திற்கு என்பதை இனங்காண்டு வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கந்தலாய் உப மத்திய நிலையத்திற்கு மின்சாரம் பெற்றுக் கொள்ள 2017 ஆண்டில் வைப்பு செய்த ரூபா 200,000 ஆன வைப்பை இலங்கை மின்சார சபையினால் உறுதி செய்திருக்காததுடன் 1987 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட உடவலவ பிரதான மத்திய நிலையத்திற்கான ரூபா 150,000 வைப்பை | 1987 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின்உடவலவ பிரதான மத்திய நிலையத்திற்கு சொந்தமான ரூபா 150,100 வைப்புக்களிற்கு | நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கிய வைப்பு மீதிகளை எழுத்து மூலம் உறுதி செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| உறுதி செய்து கொள்ளவதற்கான தகவல்கள் நிறுவனத்திடம் இல்லாதிருந்தது. | சொந்தமான அறிக்கையை கண்டறிய இயலாதுள்ளது. | |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு**

**1.6.1 பெற வேண்டிய தொகை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| கந்தலாய் சீனி கம்பனிக்கு வழங்கியுள்ள 5 ஆண்டுகளிற்கு அதிக காலமாக நிலுவையாக உள்ள ரூபா 1,000,000 கடன் தொகையை அறவிட நிறுவனத்திற்கு இயலாதிருந்தது. | கடன் தொகையை அறவிட அமைச்சு மட்டத்தில் உரிய நடவடிக்கை இடம்பெறுகின்றது. | அறவிட சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 25,400,283 இற்கான மிகை ஒன்றானதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 37,936,070 ஆனது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 63,336,353 இற்கானவளர்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 56,139,072 தொகையினால் அதிகரித்தல் மற்றும் செலவுகள் ரூபா 7,197,281 தொகையினால் வீழ்ச்சியடைதல் இந்த வளர்ச்சிக்கு முக்கியமான காரணமாக இருந்தது.

**2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்குகளின் பகுப்பாய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டில் ரூபா 236,970,043 ஆன அரச மானியம் மற்றும் மீண்டுவரும செலவின மானியம் மீளாய்வாண்டில் ரூபா 325,700,000 வரை ரூபா 88,729,957 இனால் அதிகரித்திருந்தது.

(ஆ) பொது திறைசேரி மூலங்களின் பிரகாரம் கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்திற்காக 2021 ஆண்டினுள் பொது திறைசேரியினால் வழங்கிய மூலதன மானியம் ரூபா 63.30 மில்லியனும், மீண்டுவரும் மானியம் ரூபா 262.40 மில்லியனுமானது. எவ்வாறாயினும், நிறுவனத்தின் நிதி செயலாற்றுகை கூற்றில் உள்ளக்கியுள்ள மூலதன மானியம் ரூபா 55.80 மில்லியனும், மீண்டுவரும் மானியம் ரூபா 269.90 மில்லினுமானதில் மூலதன மானியம் ரூபா 7.5 மில்லியன் மீண்டுவரும் செலவினங்களிற்கு செலவிடப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ திறமையின்மை**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி நிதியத்தை பயன்படுத்தி நிறுவனத்தினால் நடாத்திச் செல்லும் மருத்துவ காப்புறுதி உத்தேச திட்டத்திற்காக தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தின் மூலம் காப்புறுதி ஈட்டு வசதிகளை பெற்றுக் கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேசிய வரவு செலவு | கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் நிருவப்பட்ட 1984 ஆண்டு முதல் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் படி இறக்குமதி செஸ் வரி வருமானத்தின் மீது நடாத்திச் செல்லப்படும் | பொது திறைசேரியின் ஆலோசனை மீது தேசிய காப்புறுதி நிதியத்தினால் காப்புறுதி ஈட்டை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் 2017 ஆண்டில் அறிவித்திருந்த போதும், அதன்பால் கவனம் செலுத்தாது நிறுவன பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது உத்தேச திட்டத்தை நடாத்திச் சென்றிருந்ததுடன் மீளாய்வாண்டினுள் வழங்கியிருந்த நலன்கள் ரூபா 18,768,838 உம், ஆண்டிறுதியில் செலுத்த வேண்டிய தொகை ரூபா 14,415,972 உம் ஆனது. ஆண்டினுள் வழங்கிய நலன்கள் திறைசேரி மீண்டுவரும் ஏற்பாட்டின் சதவீதமாக 7 சதவீதமாமென அவதானிக்கப்பட்டது. | மருத்துவ உதவி உத்தேச திட்டம் செஸ் வரி வருமானம் பொது திறைசேரிக்கு சுவீகரிக்கப்பட்டதன் பின்னர் திறைசேரி ஏற்பாடு மற்றும் நிறுவன ஏனைய வருமான மூலங்களை பயன்படுத்தி கொடுப்பனவு செய்யப்படுகின்றது. | |
| (ஆ) | மீளாய்வாண்டின் உள்ளவாறான வருமானம் ரூபா 20,520,716 ஆன செஸ் வரி மற்றும் ஏனைய வருமானங்களிற்காக மதிப்பீடு தயாரிக்காது திறைசேரி ஏற்பாட்டை மாத்திரம் மதிப்பீடு செய்திருந்ததால் ரூபா 18,779,284 தொகை அல்லது 16.39 சதவீதமான வித்தியாசமொன்று அதவானிக்கப்பட்டதுடன் 06 செலவின தலைப்புகளின் மதிப்பீட்டு செலவு மற்றும் உள்ளவாறான செலவுகளிற்கிடையில் 12.35 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சளவில் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக பாதீட்டை ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு சாதனமொன்றாக பயன்படுத்தி இயிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | 2022 ஆண்டில் பாதீட்டிற்கு உள்நாட்டு உற்பத்தி மீதான செஸ் வரி வருமானத்தையும் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. செலவின வேறுபாடு தொடர்பாக கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பாதீட்டை பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டு சாதனமொன்றாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். |
| (இ) | தெனியாய விதைகள் விருத்தி மத்திய நிலையத்தின் வேலித் தொகுதியை நவீனமயமாக்க மற்றும் நுழைவாயிலில் இருந்து விருத்தி குகை வரையான பாதையை அமைக்க இலங்கை மஹவெலி பொருளியலாளர் ஒருவர் மூலம் தயாரிக்கப்பட்ட ரூபா 24,411,265 ஆன மதிப்பீடு பிரகாரம் பாதையை அமைக்க மாத்திரம் ரூபா 9,060,874 விற்கு மேற்கொள்ள வேண்டிய வேலைகளை உள்ளடக்கி மதில் மற்றும் வலை வேலியை நவீனமயமாக்க மேற்கொள்ள வேண்டிய வேலைகள் இல்லாது ரூபா 15,350,391 மாத்திரம் குறிப்பிட்டிருக்கையில் அதனை ஏற்றுக் கொண்டு அவரின் கட்டணமான ரூபா 1,220,562 இன் பகுதித் தொகையொன்றாக ரூபா 976,449 செலுத்தப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு பெறுமதி ரூபா 24,411,265 ஆன போதும், பாதீடு செய்யட்டிருந்த தொகை ரூபா 3,000,000 ஆனதால் பொறியியலாளரின் கட்டணத்தை செலுத்த மற்றும் பாதையின் தெரிவு செய்யப்பட்ட ஒரு பகுதியை பூர்த்தி செய்ய எடுக்கப்பட்ட பெறுகை குழு தீர்மானத்தின் பிரகாரம் திட்டத்தை வரைதல் மற்றும் மதிப்பீடு தயாரித்தலுக்காக 80 சதவீத தொகையான ரூபா 976,449 மாத்திரம் | முழு வேலைக்குமான விரிவான மதிப்பீட்டை உரிய பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செலுத்தப்பட்டுள்ளது. வேலையை பூரணமாக முடிவுறுத்திய பின் எஞ்சிய 20 சதவீத தொகையை செலுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | நிறுவனத்தின் அலுவலக நடைமுறைகள் கோவையை (Manual Of Procedure) ரூபா 434,767 ஆன கட்டணமொன்றின் மீது தயாரித்து 2019 திசெம்பர் மாதம் ஒப்படைக்கும் உடன்பாட்டுடின் மீது கட்டணத்தின் 50 சதவீதமான ரூபா 217,383 ஆன முற்பணமொன்றை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கு (SLIDA) 2019 ஓக்டோபர் மாதம் செலுத்தி 2022 ஜுன் மாதமளவில் 02 வருடங்கள் 07 மாத காலமொன்று கடந்திருந்த போதும் அவ் அலுவலக அந்த அலுவலக அமைப்பு கோவையை நிறுவனத்திற்கு வழங்கி இருக்கவில்லை. இதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரத்தை பெற்றக் கொண்டதற்கும், அந் நிறுவனத்துடன் உடன்பாடு கைச்சாத்திட்டு உடன்பாட்டிற்கு வந்ததற்குமான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை. | கரும்பு ஆராய்ச்சி நிறுவன செயற்பாட்டு நடைமுறைகள் கோவையின் வரைபு 2022 ஆண்டின் ஜுன் மாதத்தில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்திலிருந்து கிடைத்துள்ளதுடன் அங்கு உள்ளடங்கியுள்ள விடயங்களை நிறுவனத்தினால் பரிசோதித்த பின்னர் இவ் வருடத்தினுள் கடமைகள் நடைமுறை கேவையை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்பாட்டு நடைமுறைகள் கோவைக்கான அங்கீகாரத்தை பெற்று அதனை செயற்ப .டுத்த வேண்டும். |
| (உ) | நிறுவனத்தின் ஒவ்வொறு பிரிவிற்கும் பண்டக பதிவேடு பேணப்படாததால் சொத்துக்களை பாதுகாப்பாக வைத்துக் கொள்வது தொடர்பாக கவனம் செலுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | பொருட் பதிவேடுகளில் மென் பிரதி ஊடாக 2022 ஆண்டு முதல் பதிவிட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | ஒவ்வொரு பிரிவிற்காகவும் பொருட் பதிவேடு பேணப்பட வேண்டும். |
| (ஊ) | நிறுவனத்தின் 06 ஆராய்ச்சி பிரிவுகளினதும் ஆராய்ச்சி நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்படும் இயந்திர உபகரணங்களின் பயன்பாடு தொடர்பாக அறிக்கையிடலொன்று செய்திருக்காத காரணத்தால் அவ் இயந்திர உபகரணங்களை வினைத்திறனாக பயன்படுத்தப்படுவதனை உறுதி செய்ய முடியவில்லை. | எதிர் காலத்தில் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களில் ஒவ்வொரு இயந்திரத்திற்காகவும் வெவ்வேறாக பதிவேடு நடாத்தப்படும். விஞ்ஞானகூட உபகரணங்கள் தேவையான சந்தர்ப்பங்களில் மாத்திரம் பயன்படுத்துவதால் பயன்படுத்திய காலத்தின் பிரகாரம் அவற்றின் செயற்திறனை முடிவு செய்ய இயலாது. | உச்ச செயற்திறனனுடன் இயந்திர உபகரணங்களை பயன்படுத்தவும் அது பற்றிய அறிக்கைகளை பேணிக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1981 இன் 75 ஆம் இலக்க கரும்பு ஆராய்ச்சி நிறுவன சட்டத்தின் 1(1) பிரிவு பிரகாரம் கரும்பு வளர்த்தல் மற்றும் பயிரிடல் தொடர்பாக ஆராய்ச்சி நடாத்துதல் கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தை நிறுவியதன் நோக்கம் ஆனதுடன் உயர்ந்த வகை கரும்பு வர்க்கங்களை அபிவிருத்தி செய்வதற்காக மீளாய்வாண்டில் புதிதாக மேம்படுத்திய 04 வர்க்கங்களை வணிக பயிரிடலுக்காக விநியோகிக்கப்பட்டதாக முன்னேற்றத்தை காட்டியிருந்த போதும், அவ் இனங்காணப்பட்ட மற்றும் மேம்படுத்தப்பட்ட புதிய கரும்பு வர்க்கங்கள் எவைகள் என்பதை பற்றி குறிப்பிடப்பட்டிருக்காததுடன் புதிய வர்க்கங்களை விநயோகிப்பதற்கு மேற்கொள்ளப்படும் பாரிய ஆலை பரிசோதனை (Large-mill test) ஆண்டு இறுதி வரையும் மேற்கெள்ளப்படவில்லை என அறிக்கையிடப்பட்டது. | நாட்டினுள் கொவிட் பரவியதால் நிறுவன செயற்பாடுகள் அவ்வப்போது நிறுத்தப்பட்ட காரணத்தால் உரியவாறு தேவையான கரும்பு தண்டு அளவுகளை சீனி தொழிற்சாலைகளில் இருந்து உரிய காலத்தில் பெற்றுக் கொள்ள முடியாது போனதால் 2 சதவீதத்தினால் சீனி அறுவடையை அதிகரிக்கும் நோக்கத்தில் தற்போது வனிக பயிர் செய்கைக்காக விடுவிக்கவுள்ள SL 03 1025, SL 03 336, SLT 03 5441 மற்றும் SLT 03 5445 எனும் 04 கரும்பு வர்க்கங்களை 2021 ஆண்டினுள் மேற்கொள்ள முடியாமலிருந்தது. அவ் வர்க்கங்களுக்காக 2023 ஆண்டின் போது Large-mill test பூரணப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. | விநியோகிக்கப்பட்ட 4 கரும்பு வர்க்கங்களையும் முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிட வேண்டும். தாமதமின்றி பாரிய ஆலை பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் 2021 திசெம்பர் மாதம் பத்திரிகை கடித்தின் பிரகாரம் நிறுவனத்தினால் 2012 ஆண்டில் அறிமுகப்படுத்தியுள்ள SL96128 எனும் கரும்பு வர்க்கத்தை அனைத்து சீனி தொழில்ற்சாலைகளிலும் பிரசித்த வர்க்கமெனவும் அதன் விர்வாக்கம் 50 சதவீதமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், இவ் வர்க்கத்தின் சீனி திரட்டிக் கொள்ளும் இயலுமை குறைந்தது எனவும், மாற்று வர்க்கமொன்றை அறிமுகப்படுத்தும் தேவைப்பாடு காணப்படுவதாகவும் சீனி கைத்தொழிலாளரிகளுடன் நடந்த கூட்ட குறிப்பின் பிரகாரமும், பரிமாறியுள்ள கடிதங்கள் மூலமும் அவதானிக்கப்பட்டதுடன் நிறுவனத்தினால் வெளியிட்ட 2021 மார்ச் பத்திரிகை கடிதம் பிரகாரம் 2013 ஆண்டில் 8.2 சதவீதமான சீனியை திரட்டும் இயலுமை வருடாந்தம் படிப்படியாக குறைவடைந்து 2019 ஆண்டில் சீனி 7.2 சதவீதம் மற்றும் 2020 ஆண்டு 6.8 சதவீதம் வரை குறைந்துள்ளதாக | குறிப்பிட்டுள்ளவாறு சீனி திரட்டிக் கொள்ளல் குறைவடைய பயிர் செய்கை முகாமைத்துவ நடவடிக்கைகளின் பலவீனங்களை போன்று பரிந்துரைத்த பிரகாரம் முதிர்ந்த பயிர்களை அறுவடை செய்தல், உரிய காலத்தினுள் அரைந்தல் போன்றே தொழிற்சாலைகளினுள் உயர்த சீனி உற்பத்தி செயற்திறனை பேணிக் கொள்ளாமை பிரதானமாக தாக்கம் செலுத்தும். சீனி சதவீதம் ஒப்பாக அதிகமான SL 88 116 வர்க்கத்தை மேம்படுத்துவதற்காக விதை கரும்பு செவனகள கைத்தொழில் நிறுவனத்திற்கும் SL 00 92 | மேம்படுத்திய கரும்பு வர்க்கங்களை அறிமுகப்படுத்துவ தொடர்பில் விஷேட கவனம் செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதாகனிக்கப்பட்டது. | மற்றும் SL 00 354 வர்க்கங்களின் விதைக் கரும்பு நாற்றுமேடைகளை அமைக்க பெல்வத்த, கல்ஒய மற்றும் எதிமலே சீனி தொழிற்சாலைகளிற்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | 1981 இன் 75 ஆம் இலக்க கரும்பு ஆராய்ச்சி நிறுவன சட்டத்தின் மூலம் வணிக ரீதியாக கரும்பு பயிரிடல், உள்நாட்டு சீனி கைத்தொழிலிற்கு தொடர்பான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல், உள்ளநாட்டு சீனிக் கைத்தொழிலை ஒழுங்கமைத்தல் மற்றும் அறிமுகப்படுத்தும் கரும்பு வர்க்கங்களின் வணிக இயைபாக்கத்தை (Commercial Adoption) தீர்மானித்தல் போன்றவற்றிற்காக நிறுவனத்திற்கு அதிகாரம் வழங்கப்படாமை காரணமாக நிறுவனத்தை நிறுவி 37 ஆண்டுகள் காலமொன்று கடந்த போதும் சீனி கைத்தொழிலை நாட்டினுள் உரிய முறைப்படி நிறுவப்பட்டிருக்கவில்லை. நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட 2021 திசெம்பர் பத்திரிதை கடிதம் மூலம் 2020 ஆண்டில் உள்நாட்டு சீனி உற்பத்தி 61,000 மெட்ரிக் டொன் உம், சீனி இறக்குமதி 683,000 மெட்ரிக் டொன்களும் ஆனதில் ஒட்டுமொத்த சீனி வழங்களில் 91.8 சதவீதத்தை இறக்குமதி செய்துள்ளதாகவும், அதற்காக ரூபா 51 பில்லியன்கள் செலவிட்டுள்ளதாகவும், அது உணவுப் பொருட்களுக்கான செலவினத்தின் 13 சதவீதமெனவும் அவதானிக்கப்பட்டது. | 1981 இன் 75 ஆம் இலக்க கரும்பு ஆராய்ச்சி நிறுவன சட்டத்தின் மூலம் வணிக ரீதியாக கரும்பு பயிரிடல், உள்நாட்டு சீனி கைத்தொழிலிற்கு தொடர்பான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல், உள்ளநாட்டு சீனிக் கைத்தொழிலை ஒழுங்கமைத்தல் மற்றும் அறிமுகப்படுத்தும் கரும்பு வர்க்கங்களின் வணிக இயைபாக்கத்தை (Commercial Adoption) தீர்மானித்தல் போன்றவற்றிற்காக நிறுவனத்திற்கு அதிகாரம் வழங்கப்படாமை காரணமாக நிறுவனத்தை நிறுவி 37 ஆண்டுகள் காலமொன்று கடந்த போதும் சீனி கைத்தொழிலை நாட்டினுள் உரிய முறைப்படி நிறுவப்படுதல் தடைப்பட தாக்கம் செலுத்தியுள்ளன. | உள்நாட்டு சீனி கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக நிறுவனத்திற்கு சொந்தமாக இருக்க வேண்டிய அதிகாரங்களை பெற்றுக் கொள்ள முடியுமான வகையில் சட்டததை திருத்துவது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். |

## 3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சேதன பசளை உற்பத்தியின் போது மூலப்பொருட்களை துண்டாக்க ஓராண்டு உத்தரவாதத்துடன் 17 பரிவலு இயந்திர கொள்ளளவுடன் கூடிய மல்ட்டி சொப்பர் இயந்திரமொன்றை கொள்வனவு செய்ய 2021 திசெம்பர் மாதம் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரைத்து பெறுகைகள் குழு அங்கீகரித்திருக்கையில் பின்னர் அத்தீர்மானத்தை மாற்றி இயந்திரத்திற்கு உத்தரவாத காலமின்றி 8 பரிவலு இயற்திர | பெறுகைகள் குழு அங்கீகாரம் கிடைத்திருந்த ரூபா 355,000 ஆன மல்ட்டி சொப்பர் இயந்திரத் வழங்க முடியாதென அந் நிறுவனம் அறிவித்த பின்னர் அடுத்து குறைந்த விலையை முன்வைத்துள்ள நிறுவனத்திலிருந்து 08 பரிவலு கொண்ட இயந்திர கொள்ளளவை கொண்ட | விசாரணை ஒன்றை மேற்கொண்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| கொள்ளளவுடன் கூடிய இயந்திரமொன்றை ரூபா 575,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கொள்வனவு செய்த அவ் இயந்திரம் உரிய நிலைமையில் உள்ளதென சான்றிதழ் ஒன்றை பெற்றுக்கொள்ளாமை, இயந்திரம் பழுதுகளுடன் கூடியது என அறிக்கையிடப்பட்டிருந்தமை, பயன்படுத்தாது விளைவற்று காணப்படல் போன்ற காரணங்களால் அது உரிய நிலைமையில் காணப்படக் கூடிய புதிய இயந்திரமல்ல என உறுதி செய்யப்பட்டிருக்காததுடன் இந்த சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கலென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | இயந்திரத்தை தொழிநுட்ப பதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகைகள் குழுவின் பரிந்துரையுடன் முன்னர் சமர்பிக்கப்பட்ட ரூபா 650,000 தொகையிலிருந்து ரூபா 75,000 குறைத்து ரூபா 575,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அவ்வியந்திரம் பழுதடைந்து அல்லது புதிய இயந்திரமொன்றல்ல என விபரங்கள் முன்வைக்கப்படவில்லை. | |

### 3.4 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கந்தலாய் சீனி கைத்தொழிற்சாலையை ஆரம்பிக்கும் நோக்கில் அதற்கு தேவையான விரை கரும்புகளை வழங்கல், பிரதேசத்திற்கு பொருத்தமான கரும்பு வர்க்கத்தை தெரிவு செய்தல் உள்ளிட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக வசதிகளை வழங்கும் நோக்கில் 2011 ஆண்டில் கந்தலாய் சீனி கைத்தொழில் நிறுவனத்திற்கு சொந்தமான காணியிலிருந்து 400 ஏக்கர்கள் நிலஅளவை மற்றும் 13 கட்டிடங்களை கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் நிறுவனத்தினால் 27 பேர்களைக் கொண்ட ஆளணியை இணைத்து 2021 வரை 10 ஆண்டுகளினுள் மீண்டுவரும் மற்றும் மூலதன செலவுகளாக 120 மில்லியன்கள் செலவிட்டிருந்த போதும், கந்தலாய் சீனி கைத்தொழிற்சாலையை ஆரம்பித்திருக்காத காரணத்தால் அச்செலவு விளைவற்றதாகவிருந்தது. | கந்தலாய் சீனி கைத்தொழிற்சாலையை ஆரம்பிக்கும் அரசின் கொள்கையின் மீது ஆராய்ச்சி தகவல்களை உருவாக்கல் மற்றும் விதை கரும்பை தயாரித்துக் கொள்ளல் தேவையான உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி மற்றும் பேணிக் கொள்வதற்காக அமைச்சின் பரிந்துரையின் மீது இந்த உப மத்திய நிலையம் தொடர்ந்தும் நடாத்திச் செல்லப்படுகின்றது. | கந்தலாய் உப மத்திய நிலையத்தை நடாத்திச் செல்லும் தேவைப்பாடு பற்றி மீள்பரிசீலனை செய்யவும், அதன் சொத்துக்களிலிருந்து உரிய பயனை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்நாட்டு கரும்பு பயிரிடலின் உயர் வணிக கரும்பு வர்க்கத்தை முன்னேற்றுதல் மற்றும் அதற்காக ஆராய்ச்சி நடாத்துவதற்காக நிறுவியுள்ள ஒரே நிறுவனம் கரும்பு ஆராய்ச்சி நிறுவனமான போதும் அங்கு ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக பங்களிப்பு செய்யும் முக்கிய பதவியான பிரதி பணிப்பாளர் | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். |

(ஆராய்ச்சி மற்றும் தொழிநுட்ப பரிமாற்றல்) பதவி 2020 ஆண்டு முதல் பிரதான தொழிநுட்ப பரிமாற்ற அலுவலர் மற்றும் 02 பிரதான ஆராய்ச்சி அலுவலர் பதவிகள் பதவிகள் உருவாக்கப்பட்ட திகதியிலிருந்தும், எஞ்சிய 03 பிரதான ஆராய்ச்சி பதவிகள் 2013 மற்றும் 2021 ஆண்டிற்கிடைப்பட்ட காலத்தினுள்ளும் வெற்றிடமாக காணப்படுவதுடன் நிறுவனத்தின் நோக்கம் மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்ள அவை பாதிப்பாகவுளளதென அவதானிக்கப்பட்டது.